**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**

**முன்னிலை: திரு.B.பீட்டர், M.A., B.L.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**வேடசந்தூர்.**

**திருவள்ளுவராண்டு 2057 விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 19-ம் நாள்**

**2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2-ம் நாள் வியாழக்கிழமை**

**அசல் வழக்கு எண்.243/2013**

**(CNR.No.TNDG160002172019)**

1.திருமூலம்மாள்

2.பாலசுப்பிரமணி

3.மாணிக்கம். ....வாதிகள்

**//எதிர்//**

1.வெள்ளைத்தாயி

2.ராமசாமி

(As per order of this Hon'ble court in I.A.No.71/2020 dated on 28.1.2020 amended as follows)

3.மாணிக்கம்

4.தங்கராஜ் ....பிரதிவாதிகள்

இந்த வழக்கானது 16.08.2013-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என்

முன்பாக 18.03.2026-ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.N.T.R.விஜயகுமார்** அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.K.சவடமுத்து** அவர்கள் முன்னிலையாகியும் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு நீதிமன்ற அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், அழைத்தும் ஆஜராகவில்லை என்பதாலும், பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினாலும், பிரதிவாதிகள் 08.12.2016-ம் தேதியன்று தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டு ஒருதலைபட்சமாக்கப்பட்டும், வாதிகள் தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்புரை

இவ்வழக்கானது தாவா சொத்தைப் பொறுத்து 2ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள கடந்த 7.3.2006 ம் தேதியிட்ட ஆவண எண்.470/2006 உள்ள கிரைய ஒப்பந்த ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் வழங்க கோரியும், தாவா சொத்தை வாதிகள் அமைதியான முறையில் அனுபவித்து வருவதை பிரதிவாதிகளோ, அவரது வகையறா ஆட்களோ எவ்வகையிலும் தடுத்து இடைஞ்சலே, வில்லங்கமோ ஏற்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்க உத்தரவிடக்கோரியும், வழக்கின் செலவு தொகைகளை

பிரதிவாதிகள் செலுத்தகோரியும், இதர பரிகாரங்கள் வழங்க கோரியும் உரிமையியல் நடைமுறை சட்டம் ஆர்டர் 7 ரூல் 1-ன் கீழ் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்:-**

(1.1) தாவா சொத்துகள் ரெட்டின கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துகளாகும். அவர் சுயராஜ்ஜியமாக 11.6.1978, 15.7.1985 மற்றும் 5.5.1983 ம் தேதிகளில் பதிவு செய்த கிரைய ஆவணம் மூலமாக கிரையம் பெற்றுள்ளார். பின்னர் அவரது சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வந்துள்ளார். ரெட்டினகவுண்டருக்கு திருமணம் ஆகவில்லை என்பதால் அவருக்கு நேரடியான வாரிசு யாரும் இல்லை. அவர் வாதிகளுடன் வசித்து வாதிகளை அவரது குடும்ப உறுப்பினராகவே பாவித்து வசித்து வந்துள்ளார். இதற்கிடையில் கடந்த 10.10.1997 ம் தேதி ஷை ரெட்டின கவுண்டர் தாவா சொத்துகளை குறித்து எந்தவித ஆவணம் செய்து வைக்காமல் இறந்துவிட்டார். வாதியின் தகப்பனார் ஆறுமுகம் மட்டும் அவரது இளைய சகோதரர் ஆவார். இந்து வாரிசு உரிமைச்சட்டப்படி மேற்படி ரெட்டினகவுண்டருக்கு நேரடியான வாரிசுகளான மனைவி, குழந்தைகள், மற்றும் தாயார் யாரும் இல்லாத காரணத்தினால் மேற்படி ஆறுமுகம் ரெட்டின கவுண்டரின் இரத்த உறவினர் ஆதலால் தாவா சொத்துகள் அவருக்கு பாத்தியம் என்று சித்தித்து அவரது சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வந்துள்ளார்.

(1.2) வாதியின் தகப்பனாரான ஆறுமுகத்திற்கு சில கடன்களை

அடைப்பதற்காகவும் மற்றும் வாழ்க்கை ஜீவணம் செய்வதற்காகவும் பணம் தேவைப்பட்ட காரணத்தினால் கடந்த 31.1.2013 ம் தேதி ஒரு பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரத்தின் மூலம் வாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். கிரையம் பெற்ற பின் தாவா சொத்துக்கள் வாதி சுவாதீனத்தில் வைத்து வருவாய் ஆவணமான பட்டாவினை வாதி பெயரில் மாற்றி தாவா சொத்தினை அனுபவித்து வருகிறார். இதற்கிடையில் 1,2 பிரதிவாதிகள் கூட்டு சேர்ந்துகொண்டு தாவா சொத்துகளை பொருத்து வில்லங்கம் செய்வது வருவதாக வாதியின் உறவினர்கள் மூலம் அறிந்தவுடன் வாதி வடமதுரை சார்பதிவளார் அலுவலகத்தில் வில்லங்க சான்றிதழ் பெற்றபோது தான் தாவா சொத்துகளை 1,2 பிரதிவாதிகள் கிரைய ஒப்பந்தம் 7.3.2006 ம் தேதியன்று தெரியவந்த நிலையில் வாதி 1 வது பிரதிவாதியை சந்தித்து கேட்டபோது அவர் வாதியிடம் தவறுதலாக கிரைய ஒப்பந்தம் செய்துவிட்டோம் உறுதியாக அதனை ஒரு மாத காலத்திற்குள் ரத்து செய்து கொடுக்கிறேன் என்று கூறியுள்ளார். அதனால் வாதி எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எடுக்காத காரத்தினால் கடந்த 25.06.2013 ம் தேதி வாதி பிரதிவாதியை சந்தித்து கேட்டபோது வில்லங்கத்தினை தீர்த்து தர மறுத்துள்ளார். அத்துடன் தாவா சொத்தில் வாதியின் அனுபவத்தை ஆட்களுடன் அத்து மீறி நுழைய முயற்சி செய்தபோது வாதி அவரது உறவினர்கள் துணையுடன் தடுத்துநிறுத்தியுள்ளார். எனவே, கடந்த 7.3.2006 ம் தேதியிட்ட ஆவண எண்.470/2006 உள்ள செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல

என்று விளம்புகை பரிகாரம் வழங்ககோரியும், வாதிகள் அமைதியான முறையில் அனுபவித்து வருவதை பிரதிவாதிகளோ, அவரது வகையறா ஆட்களோ எவ்வகையிலும் தடுத்து இடைஞ்சலே, வில்லங்கமோ ஏற்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. பிரதிவாதிகள் அழைப்பாணை பெற்றும் ஆஜரின்மையாலும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும் கடந்த 08.12.2016 ம் தேதி தோன்றா தரப்பினாராகியுள்ளார்கள்.

3. வாதிகள் தரப்பில், 1ம் வாதி திருமூலம்மாள் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்களும், வா.சா.2 ஆக காளியப்பன் விசாரிக்கப்பட்டுள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4. **<u>தீர்வு</u>:**

வாதிகள் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. சாட்சிய சான்றாவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்டன. வாதிகள் தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 விசாரிக்கப்பட்டு சாட்சிகள் பிராதை தழுவி சாட்சியம் அளித்துள்ளார்கள்.

5. வாதிகளின் வழக்குரையிலும், வா.சா.1 நிரூபணவாக்குமூலத்திலும் பின்வருமாறு கூறியுள்ளனர்:- தாவா சொத்துகள் ரெட்டின கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துகளாகும். அவர் சுயராஜ்ஜியமாக 11.6.1978, 15.7.1985 மற்றும் 5.5.1983 ம் தேதிகளில் பதிவு செய்த கிரைய ஆவணம் மூலமாக கிரையம் பெற்றுள்ளார். பின்னர் அவரது சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வந்துள்ளார். ரெட்டினகவுண்டருக்கு திருமணம் ஆகவில்லை என்பதால் அவருக்கு நேரடியான வாரிசு யாரும் இல்லை. அவர் வாதிகளுடன் வசித்து வாதிகளை அவரது குடும்ப உறுப்பினராகவே பாவித்து வசித்து வந்துள்ளார். இதற்கிடையில் கடந்த 10.10.1997 ம் தேதி ஷை ரெட்டின கவுண்டர் தாவா சொத்துகளை குறித்து எந்தவித ஆவணம் செய்து வைக்காமல் இறந்துவிட்டார். வாதியின் தகப்பனார் ஆறுமுகம் மட்டும் அவரது இளைய சகோதரர் ஆவார். இந்து வாரிசு உரிமைச்சட்டப்படி மேற்படி ரெட்டினகவுண்டருக்கு நேரடியான வாரிசுகளான மனைவி, குழந்தைகள், மற்றும் தாயார் யாரும் இல்லாத காரணத்தினால் மேற்படி ஆறுமுகம் ரெட்டின கவுண்டரின் இரத்த உறவினர் ஆதலால் தாவா சொத்துகள் அவருக்கு பாத்தியம் என்று சித்தித்து அவரது சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வந்துள்ளார். வாதியின் தகப்பனாரான ஆறுமுகத்திற்கு சில கடன்களை அடைப்பதற்காகவும் மற்றும் வாழ்க்கை ஜீவணம் செய்வதற்காகவும் பணம் தேவைப்பட்ட காரணத்தினால் கடந்த 31.1.2013 ம் தேதி ஒரு பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரத்தின் மூலம் வாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். கிரையம் பெற்ற பின் தாவா சொத்துக்கள் வாதி சுவாதீனத்தில்

வைத்து  வருவாய் ஆவணமான பட்டாவினை வாதி பெயரில் மாற்றி தாவா சொத்தினை அனுபவித்து வருகிறார். இதற்கிடையில் 1,2 பிரதிவாதிகள் கூட்டு சேர்ந்துகொண்டு தாவா சொத்துகளை பொருத்து வில்லங்கம் செய்வது வருவதாக வாதியின் உறவினர்கள் மூலம் அறிந்தவுடன் வாதி வடமதுரை சார்பதிவளார் அலுவலகத்தில் வில்லங்க சான்றிதழ் பெற்றபோது தான் தாவா சொத்துகளை 1,2 பிரதிவாதிகள் கிரைய ஒப்பந்தம் 7.3.2006 ம் தேதியன்று தெரியவந்த நிலையில் வாதி 1வது பிரதிவாதியை சந்தித்து கேட்டபோது அவர் வாதியிடம் தவறுதலாக கிரைய ஒப்பந்தம் செய்துவிட்டோம் உறுதியாக அதனை ஒரு மாத காலத்திற்குள் ரத்து செய்து கொடுக்கிறேன் என்று கூறியுள்ளார்.  அதனால் வாதி எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எடுக்காத காரத்தினால் கடந்த 25.06.2013 ம் தேதி வாதி பிரதிவாதியை சந்தித்து கேட்டபோது வில்லங்கத்தினை தீர்த்து தர மறுத்துள்ளார். அத்துடன் தாவா சொத்தில் வாதியின் அனுபவத்தை ஆட்களுடன் அத்து மீறி நுழைய முயற்சி செய்தபோது வாதி அவரது உறவினர்கள் துணையுடன் தடுத்துநிறுத்தியுள்ளார். எனவே, கடந்த 7.3.2006 ம் தேதியிட்ட ஆவண எண்.470/2006 உள்ள செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் வழங்ககோரியும், வாதிகள் அமைதியான முறையில் அனுபவித்து வருவதை பிரதிவாதிகளோ, அவரது வகையறா ஆட்களோ எவ்வகையிலும் தடுத்து இடைஞ்சலே, வில்லங்கமோ ஏற்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும் வழக்கு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது.

6. வாதிகள் தரப்பில் 1ம் வாதி வா.சா.ஆ.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வா.சா.ஆ.1 என்பது 11.06.1978ம் தேதியிட்ட ரெட்டினகவுண்டர் பெயரில் உள்ள கிரையப்பத்திரம். வா.சா.ஆ.2 என்பது 05.05.1983ம் தேதியிட்ட ரெட்டினவுண்டர் பெயரில் உள்ள கிரையப்பத்திரம். வா.சா.ஆ.3 என்பது 15.07.1985ம் தேதியிட்ட ரெட்டினகவுண்டர் பெயரில் உள்ள கிரையப்பத்திரம். வா.சா.ஆ.4 என்பது 31.01.2013 ம் தேதியிட்ட தாவா சொத்து வாதி பெயரில் உள்ள கிரைய பத்திரம். வா.சா.ஆ.5 என்பது 13.08.2012ம் தேதியிட்ட வாதி பெயரில் உள்ள பட்டா. வா.சா.ஆ.6 என்பது வாதி பெயரில் உள்ள கிஸ்தி. வா.சா.ஆ.7 என்பது 07.03.2006ம் தேதியிட்ட கிரைய ஒப்பந்தபத்திரம். வா.சா.ஆ.8 என்பது 10.10.1997ம் தேதியிட்ட ரத்தினகிரிகவுண்டர் இறப்பு சான்று. வா.சா.ஆ.9 என்பது 26.05.2001ம் தேதியிட்ட ரத்தினகிரிகவுண்டரின் வாரிசு சான்று.

7. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ன் மூலம் தாவா சொத்துகள் ஆறுமுகம் என்பவரின் சகோதரரான ரத்தினகவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்பது தெரியவருகிறது. மேலும், ரத்தினகவுண்டர் கடந்த 10.10.1997ம் ஆண்டு இறந்துவிட்டார் என்பதற்கு இறப்பு சான்று வா.சா.ஆ.8 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், ரத்தினகவுண்டரின் வாரிசு சான்று வா.சா.ஆ.9 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.9 ன்படி ஆறுமுகம்,

திருமூலம்மாள், பாலசுப்பிரமணி மற்றும் மாணிக்கம் ஆகியோர் இறந்துபோன ரத்தினகவுண்டரின் சட்டப்படியான வாரிசுகள் என்று காட்டப்பட்டுள்ளனர்.

8. வாதிகள் வழக்குரையில் மேற்படி ரத்தினகவுண்டர் திருமணமின்றி இறந்துவிட்டதாலும், அவருக்கு மனைவி, குழந்தைகள் மற்றும் தாயார் ஆகிய நேரடி வாரிசுகள் இல்லை என்பதாலும், இரத்த உறவினரான வாதியின் தந்தை ஆறுமுகம் என்பவருக்கு பாத்தியப்பட்டு அனுபவம் செய்து வந்து வாதிக்கு ஆதரவாக கடந்த 31.01.2013 ம் தேதி தாவா சொத்துகளை வாதிக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்று கூறியுள்ளனர். அது சம்பந்தமாக வாதி தரப்பில் வா.சா.ஆ.4 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், வா.சா.ஆ.4 க்கு பின்பு வாதி தனது பெயரில் தாவா சொத்துகளை பொறுத்து பட்டா வா.சா.ஆ.5 பெற்று கிஸ்தி வா.சா.ஆ.6 செலுத்தி வந்துள்ளார் என்பது தெரியவருகிறது. இந்நிலையில் வா.சா.ஆ.4 ன்படி தாவா சொத்து வாதியின் பெயருக்கு கிரைய ஆவணத்தின் மூலம் மாற்றப்படுவதற்கு முன்பு வா.சா.ஆ.7 கிரைய ஒப்பந்த பத்திரத்தை 1,2 பிரதிவாதிகள் எந்த வித உரிமை மூலம் இல்லாமல் ஏற்படுத்திக்கொண்டுள்ளனர் என்றும், அது சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் இல்லை என்றும், மேற்படி வில்லங்கம் குறித்து 05.04.2013 ம் தேதி மற்றும் 02.05.2013 ம் தேதி வில்லங்க சான்று பெறும்போது தெரியவந்தது என்றும், அது சம்பந்தமாக வா.சா.ஆ.7 கிரைய ஒப்பந்த ஆவணத்தை ரத்து செய்துகொடுக்கும்படி 1,2 பிரதிவாதிகளை துயர்ந்தபோது சரியென

ஒப்புக்கொண்ட பின்பும் ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறியுள்ளனர். இவ்வழக்கில் மேலே கண்டபடி 1,2 பிரதிவாதிகள் வழக்கறிஞரை நியமித்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் அவர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 114(g)ன் படி மேற்கண்ட பிரதிவாதிகளின் நடவடிக்கை என்பது அவர்களுக்கு எதிராக எதிர் அனுமானம் எடுக்க முடியும் என்பதையே காட்டுகிறது. மேலும், பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாகி தங்களது சாட்சியத்தை முன்னிலைப்படுத்த தவறியது வாதிகளின் வழக்கை பிரதிவாதிகள் ஒப்புக்கொள்வதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. வா.சா.ஆ.7 கிரைய ஒப்பந்த ஆவணத்தை பரிசீலிக்கையில் சர்வே எண்.156/1A சர்வே எண்.,156/2A, சர்வே எண்.157/2 ஆகிய சர்வே எண்களும் சர்வே எண்.155/1A, சர்வே எண்.155/1B, சர்வே எண்.155/2A, சர்வே எண்.155/3A,சர்வே எண். 155/3B, சர்வே எண். 155/4A, சர்வே எண்.155/4B, சர்வே எண்.155/5A, சர்வே எண்.155/3C, சர்வே எண்.155/6A ஆகிய சர்வே எண்கள் குறித்து 1, 2 பிரதிவாதிகள் கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்தி கொண்டுள்ளனர் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ன்படி தாவா சொத்துகள் வாதிக்கு பாத்தியப்பட்டது என்பது தெரியவருகிறது. குறிப்பாக சர்வே எண்கள்.156/1 A, 156/2A, 157/1, 157/2 ஆகியவை வாதிக்கு பாத்தியப்பட்டது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட தாவா சொத்தை பொறுத்து மட்டும் வா.சா.ஆ.7 ஆவணமானது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று

இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9. மேலும், வழக்குரையிலும், வா.சா.1 மற்றும் வா.சா.2 நிரூபணவாக்குமூலத்திலும் தாவா சொத்தில் வாதிக்குள்ள அனுபவத்தை பிரதிவாதிகள் அத்துமீறி நுழைந்து இடைஞ்சல் செய்ய முயற்சித்தனர் என்று கூறியுள்ளனர். மேலே கண்டபடி பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி அதை மறுத்து சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தவில்லை என்பதால் வாதிகளின் வழக்கை பிரதிவாதிகள் ஒப்புக்கொள்வதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் வாதிகள் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தஉறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது.

**இறுதியாக, இவ்வழக்கு கீழ்க்கண்ட உத்தரவுகளுடன் தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**1.) 7.3.2006 ம் தேதியிட்ட 2 ம் பிரதிவாதி பெயரில் உள்ள ஆவண எண்.470/2006 கிரைய ஒப்பந்த ஆவணமானது தாவா சொத்தை பொறுத்து மட்டும் செல்லத்தக்கதல்ல என்ற விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது.**

**2.) தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதிகள் எந்தவித இடைஞ்சலும், தடையும் ஏற்படுத்தக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கது.**

**3.) செலவுத் தொகை இல்லை.**

இந்த தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால்

கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

B.Peter Digitally signed by B.Peter

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**வேடசந்தூர்.**

**1. வாதிகள் தரப்பு சாட்சிகள் :**

1. வா.சா.1 - திருமூலம்மாள்

2. வா.சா.2 - காளியப்பன்

**2.வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :**

| வ.எண். | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 11.06.1978 | ரெட்டின கவுண்டர் பெயரில் உள்ள கிரையப்பத்திரம் | சான்று நகல் |
| வா.சா.ஆ.2 | 05.05.1983 | ரெட்டின கவுண்டர் பெயரில் உள்ள கிரையப்பத்திரம் | சான்று நகல் |
| வா.சா.ஆ.3 | 15.07.1985 | ரெட்டின கவுண்டர் பெயரில் உள்ள கிரையப்பத்திரம் | சான்று நகல் |
| வா.சா.ஆ.4 | 31.01.2013 | தாவா சொத்து வாதி பெயரில் உள்ள கிரைய பத்திரம் | சான்று நகல் |
| வா.சா.ஆ.5 | 13.08.2012 | வாதி பெயரில் உள்ள பட்டா | சான்று நகல் |
| வா.சா.ஆ.6 | ----- | வாதி பெயரில் உள்ள கிஸ்தி | அசல் |

| வ.எண். | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| வா.சா.ஆ.7 | 07.03.2006 | கிரைய ஒப்பந்தபத்திரம் | நகல் |
| வா.சா.ஆ.8 | 10.10.1997 | ரத்தினகிரிகவுண்டர் இறப்பு சான்று | நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| வா.சா.ஆ.9 | 26.05.2001 | ரத்தினகிரிகவுண்டரின் வாரிசு சான்று | நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |

**3. பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை.

B.Peter Digitally signed by B.Peter

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**வேடசந்தூர்,**